# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.4 (LW-5)
# SC.NO.75/2018

| | | |
|---|---|---|
| **Name** | : | சிவாஜி |
| **Father Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling /Occupation** | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஆம்பூர்) |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of** 19.11.2024

அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர்தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் மூவர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் 2006 ஆம் ஆண்டு வேலூர் மாவட்ட ஆயுத படையில் தலைமை காவலராக பணி புரிந்த வந்த போது 21.03.2006 ஆம் ஆண்டு நான் ஆஜரில் இருந்த போது ஆர்.எஸ்.ஐ. சீனிவாசன் என்பவர் 10 ஆயுத படை காவலருடன் அரசு வாகனம் டி.என்.23 ஜி 394 என்ற வாகனத்தில் வேலூர் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சீருடையில் 15.30 மணிக்குஅறிக்கை செய்தோம். டி.எஸ்.பி மற்றும்

வேலூர் தாலுக்கா உதவி ஆய்வாளர் மற்றும் விரிஞ்சிபுரம் ஆகியோர்களுடன் 16 மணிக்கு புறப்பட்டு 16.45மணிக்கு விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் அறிக்கை செய்தோம். அங்கு டி.எஸ்.பி. சாராய தடுப்பு சம்மந்தமாக, ரெய்டு சம்மந்தமாக அறிவுரை வழங்கினார். நாங்கள் அனைவரும் டி.எஸ்.பி தலைமையில் சிவநாதபுரம் கைலாய மலை திப்பை சென்று பெயர் விலாசம் பின்னர் கேட்டு தெரிந்து மணி (எ) நடுபையன், சடையன், வெங்கடசன், முனிரத்தினம் ஆகியோர்கள் சாராயம் விற்று கொண்டு இருந்தார்கள் என்ற தகவலை தெரிந்து கொண்டு அங்கு டி.எஸ்பி. தலைமையில் சென்றோம்.

போலிஸ் வருவதை கண்டு குடிக்க வந்தவர்கள் ஓடி விட்டார்கள்.சாராயம் விற்று கொண்டு எதிரிகள் ஓடாமல் அங்கேயே நின்று விட்டார்கள். அந்த நபர்கள் நீதிமன்றத்தில் இருக்கிறார்கள். முன்னால் சென்ற ஆர்.எஸ்.ஐ சீனிவாசனை நோக்கி எங்களை பொழப்பை கெடுக்க வந்த தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த நாட்டு துப்பாக்கியால் சடையன் என்பவர் ஆர்.எஸ்.ஐ சுட அவர் கீழே குனிந்து மலையில் கீழே இருந்து உருண்டு விடுகிறார். பிறகு மணி என்பவர் கையில் இருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து டி.எஸ்.பி சுட குறி வைக்கிறார். அப்போது டி.எஸ்.பி எச்சரிக்கை செய்து துப்பாக்கியை கீழே போட்டு விட்டு சரண்அடைய சொன்னார்.

எதிரி அதை பொருட்படுத்தாமல் சுட முயற்ச்சித்த போது டி.எஸ்.பி தன் உயிரை காப்பாற்றி கொள்ளவும் மற்றும் அவருடன் எங்களை காப்பாற்றவதற்காகவும் மணி என்பவரை டி.எஸ்.பி வலது காலில்

துப்பாக்கியால் சுட்டார். எதிரி மணி என்பவர் ரத்த காயத்துடன் அங்கேயே கீழே விழுந்து  விட்டார். அங்கு அருகில் இருந்த வெங்கடசேனை நானும், அந்தோனி ராஜ்யும் பிடிக்க சென்ற போது வெங்கடேசன் என்பவர் வாடா தேவிடியா பசங்களா எங்களை பிடிக்க வந்தீர்கள் என்று கையில் வைத்திருந்த கத்தியால் அந்ததோயி ராஜ் என்பவரை வலது கை மற்றும் இடது கை மற்றும் மார்பில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் அந்தோனி ராஜ் என்பவர் கீழே விழுந்து விட்டார். வெங்கசேடன் தற்போது நீதிமன்றத்தில் தற்போது இல்லை   (இறந்து விட்டார்)

பின்பு என்னுடன் வந்த காவலர் ராஜமூர்த்தி, குகன்  ஆகியோர் வெங்கசேடனை மடக்கி பிடித்து கத்தியை பிடுங்கி கொண்டு அந்தோணி ராஜா வெங்கடேசனை கூடிக் கொண்டு போய் இவ்வாறு நடந்ததை தெரிவிதோம். டி.எஸ்.பி சம்பவ நடந்த இடத்திற்கு வந்து சோதனை செய்யும் போது இரண்டு டியுப் சுமார் 100 லீட்டர் நாட்டு சாராயம் மற்றும் கையில் இருந்த ரூ.150/– ஆகியவற்றை கைப்பற்றி காயம் பட்ட மணி, அந்தோணி ராஜா, ஆர்.எஸ்.ஐ சீனிவாசன் ஆகியருக்கு முதலுதவி அளித்து வேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்.

இது சம்மந்தமாக டி.எஸ்.பி, டி.சி.ஆர்.பி( குற்ற ஆவண காப்பகம்) என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஏற்கனவே சாட்சிகள்  அ.சா.1 மற்றும் 2 குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருப்பதாலும், அவர்களை குறுக்கு விசாரணை செய்த

பிறகு மற்ற சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கோரி மனு அனுமதிக்கப்படுகிறது.

எனவே குறுக்கு விசாரணை தற்போது இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI

Digitally signed by G SANTHI
Date: 2024.11.20 17:21:11 +0530

முதலாவது கூடுதல் அமா்வு நீதிபதி,
வேலூா்.